செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 274 நாள்: 10-5-18

நக.அ4/10368/2018

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர் - நாள்:09.05.2018
சித்திரை, 26 திருவள்ளுவர் ஆண்டு 2049

## பத்திரிக்கை செய்தி

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம் நகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள புகழ் வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் திருக்கோயில் சிரசு ஊர்வல திருவிழா 15.05.2018 அன்று செவ்வாய்கிழமை நடைபெற உள்ளதால் அவ்வமையம் பொதுமக்கள், அரசு அலுவலர்கள் மற்றும் ஏனையோர் கலந்துகொள்ள வசதியாக, குடியாத்தம் கெங்கையம்மன் கோயில் சிரசு ஊர்வல திருவிழா நடைபெறும் அன்று, 15.05.2018-ம் தேதி செவ்வாய்கிழமை வேலூர் மாவட்டம் முழுவதும் உள்ளூர் விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது. அதற்குப் பதிலாக 09.06.2018 அன்று சனிக்கிழமை அரசு அலுவலகங்களுக்கு வேலை நாளாகவும், 10.06.2018 அன்று ஞாயிற்றுக் கிழமை அச்சக பணியாளர்களுக்கு வேலை நாளாகவும் அறிவிக்கப்படுகிறது.

2) இந்த உள்ளூர் விடுமுறை நாட்கள் செலவாணி முறைசட்டம், 1881 (Negotiable Instruments Act - 1881)-ன் கீழ் வராது என்பதால் மேற்படி நாளில் 15.05.2018 அன்று கருவூலகங்களும், சார்நிலை கருவூலகங்களும் அரசு பாதுகாப்புக்கான அரசு அலுவல்களை கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

ஒம்/-சி.அ.ராமன்
மாவட்ட ஆட்சியர்,
வேலூர்.

/ஆணைப்படி/

செ.ம.தொ.அ. (கையொப்பம்)
வேலூர்- 9.

மாவட்ட ஆட்சியருக்காக,

பெறுநர்